Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs. /27.08.2026/Script

வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 27.08.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ற, நவீன விளையாட்டு சூழல் ஒன்றை நாட்டில் உருவாக்க, அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்த, எதிர்கால நோக்குடன் கூடிய திட்டமிடல் அவசியம், என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

தமிழகத்தில் இருந்து கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்குச் சென்ற போது, நேபாளத்தில், திடீர் வெள்ளத்தில் சிக்கிய 21 பேர் மீட்கப் பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேபாள வெள்ளத்தில் பலியானவர்களுக்கு, இன்று புதுச்சேரி சட்டமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மோடி கேலோ இண்டியா -1 (18)

21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ற, நவீன விளையாட்டு சூழல் ஒன்றை நாட்டில் உருவாக்க, அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார். விளையாட்டு பல்கலைக் கழகங்கள் முதல், நவீன பயிற்சி மையங்கள் வரை, அனைத்து வசதிகளும் தற்போது உருவாக்கப்பட்டு வருவதாகவும், திறமையான விளையாட்டு வீரர்களுக்கு, ஒவ்வொரு கட்டத்திலும், உரிய ஆதரவு வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று தேசிய அளவிலான,கேலோ இண்டியா சம்வாத்-விவாத நிகழ்ச்சியில், காணொளி காட்சி மூலம் உரையாற்றிய அவர், விளையாட்டு என்பது, பதக்கங்களை வெல்வது மட்டுமே அல்ல என்றும், முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்க ஏதுவாக, நாட்டின் விளையாட்டு திறன்களையும், இளையோர் ஆற்றலையும், ஒருங்கிணைப்பதே அரசின் நோக்கம் என்றும் கூறினார்.

மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இந்நிகழ்ச்சியில் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், விளையாட்டுத் துறை தற்போது தேசிய முன்னுரிமையாக மேம்பட்டு, இளைஞர் அதிகார பங்கேற்பிற்கான முக்கிய கருவியாக மாறி இருப்பதாக கூறினார்.

மோடி கேலோ இண்டியா -2 (20)

விளையாட்டு வசதிகள் மற்றும் பதக்கங்களின் எண்ணிக்கயை அதிகரிப்பதற்கு அப்பாற்பட்டு, Fit India, Sunday Cycling போன்ற முன்முயற்சிகளால், உடல் தகுதி குறித்த ஆர்வம், மக்கள் வாழ்வின் ஒரு பகுதியாகவே மாறிவருவதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய விளையாட்டு தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, **மேரா யுவ பாரத்** சார்பில் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கு உட்பட்ட, சுமார் 5 ஆயிரம் இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, **கேலோ இண்டியா** விவாத நிகழ்ச்சியில், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், மற்றும், கேலோ இண்டியா மையங்களில் இருந்து, மாணவர்கள் மற்றும், என்.எஸ்.எஸ். தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். புதுச்சேரியில் மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கேலோ இண்டியா கலந்துரையாடல் நிகழ்ச்சியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், ஜிப்மரில், ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். காரைக்கால் மற்றும் ஏனாமிலும், கேலோ இண்டியா கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முழு உடல் தகுதி மற்றும் ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கூடிய, விளையாட்டு சக்தியாக இந்தியாவை மேம்படுத்தும் அதே வேளை, இளையோர் எண்ணங்களை நாட்டின் வளர்ச்சிக்கான செயல் திட்டத்தின் மையப் புள்ளியாக மாற்ற வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர

## மோடி கேலோ இண்டியா -3 (03)

மோடியின் தொலை நோக்குப் பார்வைக்கு ஏற்ப, தேசிய அளவிலான கேலோ இண்டியா விவாதங்கள் அமைந்து இருந்தன.

கேலோ இண்டியா சம்வாத் நிகழ்ச்சியில் பிரமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

மோடி கேலோ இண்டியா – 04 வாய்ஸ் (19)

(வாய்ஸ்)

உலகின் விளையாட்டு வரைபடத்தில் ஒளிரும் உள்ளாற்றல், நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருப்பதை கருத்தில் கொண்டே 5 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளில், விளையாட்டுத் திறன் அதிகம் உள்ளவர்களை இனம் காண, புதிய முன்முயற்சித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். குழந்தைகளுக்கு ஆர்வமுள்ள விளையாட்டு எது, என்பதற்கு அப்பாற்பட்டு, எந்தக் குழந்தைக்கு, எந்த விளையாட்டு ஏற்றது என்பதை இனம் கண்டு ஆதரிக்க வேண்டியதும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில், தொழில் முறை துறைகளில் ஒன்றாக தற்போது விளையாட்டுத் துறை மேம்பட்டு வருவது குறித்து, பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டார். விளையாட்டுத் துறை, சாம்பியனாவது எப்படி என்பதற்கு அப்பாற்பட்டு, திறம்பட்ட போட்டியாளராக மேம்படுவது எப்படி என்பதையும் இளைஞர்களுக்கு கற்றுக் கொடுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கேலோ இண்டியா விவாத நிகழ்ச்சியில் வெளியாகும் ஒவ்வொரு கருத்தும், விளையாட்டு குறித்த நாட்டின் அணுகுமுறைக்கு, புதிய திசை காட்டும் முறையில் அமையும் என தாம் நம்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இந்திய இளைஞர்களின் இத்தகைய புதிய கருத்துக்களே, விக்சித் பாரத் இலக்கை அடைவதற்கான, வலுவாக அமையும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கட்கரி (12)

நாட்டின் நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்த, எதிர்கால நோக்குடன் கூடிய திட்டமிடல் அவசியம், என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார். புதுடெல்லியில், வளங்குன்றா வளர்ச்சி குறித்த உலக உச்சி மாநாட்டில், காணொளி காட்சி மூலம் உரையாற்றிய அவர், தொழில்-வர்த்தகம், வேளாண்மை, சுற்றுலா உட்பட, நீடித்த வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட அனைத்து துறையினரிடையே, ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு அவசியம் என்றார். உரிய திட்டமிடல், மற்றும், தெளிவான பார்வையுடன், சவால்களை வாய்ப்புகளாக, மாற்ற வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார். வளர்ச்சித் திட்டங்கள், உள்நாட்டு தொழில்நுட்பங்களின் அடிப்படையில், திறம்பட்டதாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் அமைதல் அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

## பயிற்சி விமானம் (05)

உத்தரபிரதேச மாநிலம், கான்பூரில் இன்று தனியார் விமானப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த பயிற்சி விமானம், கங்கை கரையில் விழுந்து விபத்துக்குள்ளானதில், பயிற்சி விமானி ஒருவரும், பயிற்சியாளர் ஒருவரும் உயிரிழந்தனர். மீட்பு படையினர் மற்றும் உள்ளூர் அதிகாரிகள், சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்து, மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

**நேபாளம் நடவடிக்கை - 1 (10)**

தமிழகத்தில் இருந்து கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்குச் சென்ற போது, நேபாளத்தில், திடீர் வெள்ளத்தில் சிக்கிய 21 பேர் மீட்கப் பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. வெள்ளத்தில் சிக்கியுள்ள இந்தியர்கள் அனைவரையும், கண்டுபிடித்து மீட்பதற்கான முயற்சிகள் தீவிரமாக்கப் பட்டுள்ளதாக, வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு.ரண்தீர் ஜெய்ஸ்வால் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் கூறினார். நேபாளத்தில், திரிசூலி மின் உற்பத்தி திட்டத்தில் பணிபுரியும் 73 பேர் உட்பட, இதுவரை 288 பேர் இந்தியர்களுடன் தொடர்புகொள்ள முடிந்து இருப்பதாக, அவர் தெரிவித்தார். இது குறித்து கூடுதல் விவரங்கள் …

(வாய்ஸ்)

நேபாளம் நடவடிக்கை - 2 வாய்ஸ் (15)

(வாய்ஸ்)

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இன்று புதுடெல்லியில், வெளியுறவு செயலர், சீனாவிற்கான இந்திய தூதர், மற்றும், நேபாளத்திற்கான இந்தியத் தூதருடன், நிலவரங்கள் குறித்து மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு உதவ, இந்தியா 47 டன் நிவாரணப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைத்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில், தற்காலிக பாலங்களை அமைக்கத் தேவையான உதவிகளையும் இந்தியா வழங்கி வருகிறது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உறவினர்களுக்கு உதவ, வெளியுறவு அமைச்சகத்தில் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. காத்மாண்டு மற்றும் பெய்ஜிங்கில் உள்ள இந்திய தூதரகங்களில், 24 மணி நேர உதவி எண்கள் நிறுவப்பட்டுள்ளன. திடீர் வெள்ளத்தினால், சீனப் பகுதியில் சிக்கியுள்ள சுமார் 200 இந்தியர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும், மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில், 95 பேர் நேபாளப் பகுதிக்கு வந்து கொண்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

## புதுச்சேரி இரங்கல் (11)

நேபாளத்தில் திடீர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு, இன்று புதுச்சேரி சட்டமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு, இந்தியா துணை நிற்கும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறி இருப்பதற்கும், பேரவையில் நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களில், உறுப்பினர்கள் பங்கேற்றுப் பேசினர். விவாதங்களுக்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி பதிலளிக்கயில், கோப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப் படுவதால் ஏற்படும் தாமதங்களை தவிர்க்க, புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து அவசியம் என்றார். முதலமைச்சரின் பதிலை தொடர்ந்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் குரல் ஓட்டு மூலம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சுகாதாரம் (13) 95

தமிழகத்தில் டெங்கு மற்றும் பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்க, மருத்துவக் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதாக, மாநில சுகாதார அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார். இன்று தமிழக சட்டமன்றத்தில், சுகாதார நிலவரங்கள் குறித்த கவன ஈர்ப்பு ஒன்றிற்கு பதிலளித்த அவர், தமிழகத்தில் டெங்கு காய்ச்சலால் 7 பேர் உயிரிழந்த நிலையில், சுமார் 12 ஆயிரம் பேருக்கு டெங்கு காய்ச்சல் இருப்பதாக தெரிய வந்திருப்பதால், வைரஸ் மேலும் பரவாமல் தடுக்க, நடவடிக்க எடுக்கப்படுவதாக கூறினார். மருத்துவ பணியாளர்கள், வீடு வீடாகச் சென்று, கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். நடப்பு பருவ நிலையில், குறிப்பாக, மூத்த குடிமக்கள் மற்றும் கருவுற்ற பெண்கள், போதிய முன்னெச்சரிக்கயுடன் இருக்க வேண்டியது அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

## வானிலை (15)

இன்றும் நாளையும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 2ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தமிழக கடலோர பகுதிகள், வங்கக்கடல் பகுதிகள், மற்றும், அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம், சின்னக் கல்லார் உள்ளிட்ட இடங்களில், 8 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

கிரிக்கெட் (04)

இந்தியா—இலங்கை அணிகளுக்கு இடையே, கொழும்புவில் நடைபெற்ற, 2ஆவது மற்றும் இறுதி கிரிக்கெட் போட்டி, எந்த அணிக்கும் வெற்றி—தோல்வியின்றி டிராவில் முடிவடைந்தது. இதன் மூலம், 2க்கு-1 என்ற கணக்கில், இந்தியா, தொடரைக் கைப்பற்றி உள்ளது.

## மோடி ஜன் தன் (14)

நாட்டு மக்கள் அனைவரும் வங்கி வசதி வழங்குவதற்கான பிரதமரின் ஜன் தன் திட்டம், நாளை, 12 ஆண்டுகளை பூர்த்தி செய்து, முக்கிய மைல்கல் ஒன்றை எட்டுகிறது. 2014ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் தேதி, பிரதமர் திரு.நரேந்திர மோடி தொடக்கி வைத்த இத்திட்டத்தின் கீழ், நாட்டில் இதுவரை 53 கோடிக்கும் மேற்பட்ட வங்கி கணக்குகள் தொடக்கப்பட்டு, சுமார் 3 லட்சத்து 17ஆயிரம் கோடி ரூபாய் டெபாசிட் பெறப்பட்டுள்ளது. இதன் சராசரி, ஒரு கணக்கிற்கு 5 ஆயிரத்து 356 ரூபாயாக கணக்கிடப்பட்டுள்ளது. அனைவருக்கும் வங்கி வசதி வழங்குவதற்கான, உலகின் மிகப்பெரிய திட்டமான, பிரதமரின் ஜன்தன் திட்டத்தினால், நாட்டில் முறையான நிதிக் கட்டமைப்பில் சேரும் மக்களின் எண்ணிக்கை, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஜன்தன் திட்டத்தின் கீழ் தொடக்கப்பட்ட வங்கி கணக்குகளின் கீழ் 78 சதவிகித கணக்குகள் கிராமப்புறங்கள் மற்றும், சிறு நகரங்களில் செயல்பட்டு வருவதும், 56 சதவிகித கணக்குகள் பெண்களின் பெயரில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ற, நவீன விளையாட்டு சூழல் ஒன்றை நாட்டில் உருவாக்க, அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்த, எதிர்கால நோக்குடன் கூடிய திட்டமிடல் அவசியம், என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

தமிழகத்தில் இருந்து கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்குச் சென்ற போது, நேபாளத்தில், திடீர் வெள்ளத்தில் சிக்கிய 21 பேர் மீட்கப் பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேபாள வெள்ளத்தில் பலியானவர்களுக்கு, இன்று புதுச்சேரி சட்டமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/MS/VM

Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs/ 27.08.2026 / Script